# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION (EXTERNAL) - 2008 / 2009 HELD IN AUGUST - 2009

## BBA 23 – BUSINESS LAW

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. விற்பனை செய்யப்பட்ட பொருள் ஒன்று எப்போது அது என்ன நோக்கத்திற்கு வாங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்குப் பொருத்தமுடையதாக இருக்க வேண்டும். தீர்ப்புச் சட்டங்களுடனும் பொருத்தமான சட்ட ஏற்பாடுகளுடனும் விளக்குக.

02. விற்பனையின் பின்னர் பணம் செலுத்தப்படாத விற்பனையாளர் ஒருவருக்கு உள்ள உரிமைகள் யாவை?

03. (அ) முகவர் ஒருவரின் அதிகாரமளிக்கப்படாத செயல்களை அவருடைய முதல்வர் எப்போது ஏற்று அங்கீகரிக்கலாம்?

(ஆ) முதல்வர் ஒருவர் தொடர்பில் அவருடைய முகவர் ஒருவர் எத்தகைய கடமைகளைக் கொண்டிருக்கின்றார்? விளக்குக.

04. பிரபல்யமான கம்பனியொன்று பத்திரிகை விளம்பரமொன்றில் பின்வரும் விளம்பரமொன்றினைச் செய்திருந்தது.

"விலை ரூபா 15,000 இற்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் விற்பனைக்குண்டு."

வாடிக்கையாளர் ஒருவர் குறித்த கம்பனிக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தனக்கு ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை குறித்த விலைக்கு ஒதுக்கித் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் கம்பனியானது தற்சமயம் விற்பனைக்கு வைத்திருந்த சகல தொலைக்காட்சிப் பெட்டிகளும் விற்பனை செய்யப்பட்டு விட்டன எனத் தெரிவித்து, உங்களது கோரிக்கையை நிறைவேற்ற முடியாதுள்ளது எனத் தெரிவித்தது. குறித்த இவ்வாடிக்கையாளர் ஒப்பந்த முறிவொன்றிற்கு இக்கம்பனிக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார். இவ்வழக்கில் இக்கம்பனி ஒப்பந்த மீறலுக்குப் பொறுப்பாக்கப்பட்டிருக்குமா? விளக்குக.

05. தேச வழமைச் சட்டம் எவ்வகையில் அதன் பிரயோகம் தொடர்பில் ஏனைய ஆள்சார் சட்டங்களில் இருந்து வேறுபாடு கொண்டதாக அமைந்துள்ளது? விளக்குக.

06. பங்குடைமை ஒப்பந்தமொன்றின் உருவாக்கம் தொடர்பில் எமது நீதிமன்றங்கள் மோசடித் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 18 ஐ எத்தகைய சந்தர்ப்பங்களில் இறுக்கமாகப் பார்ப்பதில்லை. நீதிமுறைத் தீர்ப்புகளுடன் ஆராய்க.

***